2017 ஜூன் 14] [பேரவைத் தலைவர்]

திரு. இரா. செழியன் அவர்கள், 1962 முதல் 1977 வரை மக்களவை உறுப்பினராகவும் மற்றும் 1978 முதல் 1984 வரை மாநிலங்களவை உறுப்பினராகவும் சிறப்பாகப் பணியாற்றி அனைத்து தரப்பினரின் நன்மதிப்பையும் பெற்று சிறந்த நாடாளுமன்றவாதியாகத் திகழ்ந்தார். பேரறிஞர் அண்ணா அவர்கள்மீது கொண்ட பற்றால் அவருடன் தன்னை இணைத்துக்கொண்டு பணியாற்றி வந்தார். சிறந்த படைப்பாளியான இவர், பாராளுமன்ற விதிகள் தொடர்பாக பல்வேறு நூல்களை எழுதியதுடன், பத்திரிகைகளுக்கு அரசியல் விமர்சனக் கட்டுரைகளும் வழங்கி வந்தார்.

மறைந்த முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2005 ஆம் ஆண்டில் "பெரியார் விருதும்", 2012 ஆம் ஆண்டில் "பேரறிஞர் அண்ணா விருதும்" அன்னாருக்கு வழங்கி கௌரவித்தார்கள்.

அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித் துளிகள் அமைதி காத்தனர்.)

முற்பகல் 10—05

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பிரபு, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

1—

சுற்றுச் சுவர்

***16811—திரு. அ. பிரபு:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியம், தியாகை கிராமத்தில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கக் கட்டடத்திற்கு நபார்டு திட்டத்தின்கீழ் சுற்றுச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூரா் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சா்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி வட்டத்தில் உள்ள தியாகை தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம் 1970 முதல் செயல்பட்டு வருகிறது. இச்சங்கத்திற்கு தொடக்க கூட்டுறவு வளர்ச்சி நிதியிலிருந்து நிதியுதவி பெற்று, சுற்றுச் சுவர் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பிரபு அவர்கள்.

திரு. அ. பிரபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய பதிலுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், கள்ளக்குறிச்சி தொகுதியில் தியாகதுருகம் ஒன்றியம், சின்ன சேலம் ஒன்றியம், கள்ளக்குறிச்சி ஒன்றியம் ஆகிய பகுதிகளில் உள்ள பல்வேறு கூட்டுறவுச் சங்கங்கள் சுற்றுச் சுவர் இல்லாமல் இருக்கின்றன. மேலும், அங்கே இருக்கக்கூடிய கூட்டுறவுச் சங்கங்களுடைய கட்டடங்களும் பழுதடைந்துள்ளன. எனவே அதனைக் கருத்திற்கொண்டு, சின்ன சேலம் ஒன்றியம், பூண்டி ஊராட்சி, அம்மையகரம் ஊராட்சி, பங்காரம் ஊராட்சி மற்றும் இந்த ஊராட்சிகளில் இருக்கும் சொசைட்டிகளுக்கு கட்டடங்கள் மற்றும் சுற்றுச் சுவர் தேவைப்படுகின்றது. மேலும், நயினார்பாளையம், ராயப்பனூர், எலவாடி, மேல்நாரியப்பனூர் ஆகிய ஊராட்சிகளில் உள்ள சொசைட்டிகளுக்கு சுற்றுச் சுவர் தேவை. தியாகதுருகம் ஒன்றியம், மேலாகுறிச்சி, முடியனூர் ஆகிய இரண்டு கூட்டுறவுச் சங்கங்களுக்கும் சுற்றுச் சுவர் தேவைப்படுகிறது. ரிஷிவந்தியம் ஒன்றியம், குன்னியனூர் ஊராட்சியில் அமைந்திருக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சுற்றுச் சுவர் தேவைப்படுகிறது. கள்ளக்குறிச்சி ஒன்றியம்,

தென்கிரஹூர், செருவங்கூர், புக்ரவாரி ஆகிய ஊராட்சிகளில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கும் சுற்றுச் சுவர் தேவைப்படுகிறது. எனவே, இவை அனைத்தையும் கருத்திற்கொண்டு, உடனடியாக சுற்றுச் சுவர் மற்றும் கட்டடங்கள் அமைக்க அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல கருத்தைத்தான் இங்கே சொல்லியிருக்கின்றார். கூட்டுறவுச் சங்கங்களுடைய பாதுகாப்பு கருதி, எங்கெங்கெல்லாம் சுற்றுச்சுவர் பழுதடைந்து இருக்கின்றனவோ, அங்கெல்லாம் அதைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கின்றார். நம்முடைய துறையின் சார்பாக நிச்சயமாக, அவர் குறிப்பிட்டிருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கு என்னென்ன தேவை என்பதை ஆராய்ந்து, உறுதியாக தொடக்க கூட்டுறவு வளர்ச்சி நிதி மற்றும் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து நிதி பெற்று, சுற்றுச் சுவர் மற்றும் கட்டடங்கள் கட்டுவதற்கான வழிவகைகள் துறைரீதியாகப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதிக்குட்பட்ட சோழபுரம், கோவிலாச்சேரி ஆகிய பகுதிகளில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் நடைபெற்று வருகின்றன. அனக்குடி, புத்தூர், மஹாராஜபுரம் போன்ற ஊராட்சிகளில் இருக்கக்கூடிய விவசாயிகள் நீண்ட நெடிய தூரம் சென்று அந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் செயல்பாடுகளை வைத்திருக்கின்றார்கள். இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயச் சங்க உறுப்பினர்கள் பெரும் அலைச்சலுக்கு உள்ளாகி இருப்பதால், புத்தூரில் தனியாக ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம் துவக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோவி. செழியன் அவர்கள், நீண்ட தூரம் சென்று விவசாயிகள் கடன் பெறுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. எனவே, அதைக் கருத்திற்கொண்டு அவர்கள் வசிக்கக்கூடிய பகுதியில் அந்தப் புதிய கூட்டுறவுச் சங்கத்தினைத் தொடங்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார். குறிப்பாக ஒரு புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தைத் தொடங்க வேண்டுமென்றால், கூட்டுறவுச் சட்ட விதி 376—ன்படி, 2,000 ஹெக்டேர் அல்லது 4,850 ஏக்கர் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு தேவை.

முற்பகல் 10—10

அதுமட்டுமல்ல; ஆண்டிற்கு 2 கோடி ரூபாய் அளவிற்கு வணிகம் நடைபெற வேண்டும். அது பயிர்க் கடன் மட்டுமல்லாமல், பன்முகக் கடனாக அமையும்பட்சத்தில், அச்சங்கத்திற்கு குறைந்தபட்சம் 5 இலட்சம் ரூபாய் வருவாய் ஈட்டக்கூடிய வாய்ப்பு கிடைக்கும். அப்பொழுதுதான் சங்கம் நஷ்டம் இல்லாமல் இயங்க முடியும். தற்பொழுது அதுபோன்ற சூழ்நிலை இருக்கும்பட்சத்தில், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை உறுதியாகப் பரிசீலித்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மற்றொன்று, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பதுபோன்று, விவசாயிகள் சங்கத்தை நாடி நீண்ட தூரம் செல்வதைக் கருத்திற்கொண்டு, அரசு நிலம் அல்லது ஊராட்சிக்குட்பட்ட நிலங்கள் அல்லது கட்டடங்கள் ஏதேனும் இருக்கும்பட்சத்தில், அந்தத் தொடக்கக் கூட்டுறவுச் சங்கத்தினுடைய ஒரு பகுதியாக, அந்தச் சங்கத்தினுடைய கிளையைத் தொடங்குவதற்கும், அதன்மூலம் வரவு செலவு வைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இப்பொழுது அதிகமாக உள்ளன. மற்றொன்று என்னவென்றால், விவசாயிகள் சங்கங்களைத் தேடி அலைய வேண்டியதில்லை. தற்போது மாண்புமிகு அம்மா அவர்களது அரசு அமைந்தபிறகு, கடந்த 6 ஆண்டுகளில், அனைத்துச் சங்கங்களுமே கணினிமயமாக்கப்பட்டுள்ளன. 4,467 சங்கங்கள் இன்றைக்குக் கணினிமயமாக்கப்பட்டு, online மூலமாக இயங்கிவருகின்றன.

மேலும், தற்போது, 4,65,000 உறுப்பினர்களுக்கு உறுப்பினர் அட்டை, Kisan Card வழங்கப்போகிறோம். அந்தக் கார்டை வைத்துக்கொண்டு அவர்கள் எங்கு வேண்டுமானாலும் அவர்களது தேவைக்கேற்ப பயிர்க் கடனுக்குண்டான உரிய நிதியைப் பெற முடியும். இன்றைக்குத் துறைரீதியாக எடுக்கப்பட்டிருக்கின்ற நடவடிக்கையின்மூலம் அத்தகைய சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. எனவே, இத்தகைய நடவடிக்கையின் மூலமாக இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு சாதனையை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு, 6 ஆண்டுகளில் செய்திருக்கிறது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கூட்டுறவுத் தொடக்க வேளாண்மை வங்கிகள், விவசாயிகளுக்கு வரப்பிரசாதமாக இருக்கின்றன என்பது அனைவரும் அறிந்ததே. ஆகவே, இத்தகைய கூட்டுறவு வங்கிகளில் பல்லாயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான விவசாயப் பெருமக்கள் உறுப்பினர்களாக இருந்து, அவர்களுடைய நகைகளையெல்லாம் அங்கு கொண்டுபோய் வைத்து, வங்கிகள் மூலமாகக் கடனுதவி பெறும் அளவிற்கு அந்தக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அப்படிச் செயல்பட்டுக்கொண்டிருக்கும் அந்த வங்கிகளில் இப்பொழுது ஒரு துர்ப்பாக்கியமான நிலை இருக்கிறது. அதாவது, பல்வேறு கூட்டுறவு வங்கிகளில் சுற்றுச்சுவர் இல்லாத காரணத்தினால், திருடுபோவது அதிகரித்துக்கொண்டிருக்கிறது. எனவே, அதைத் தடுக்கின்ற வகையில், தமிழ்நாடு முழுவதிலும் இருக்கின்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சுற்றுச்சுவரைக் கட்டித் தருவதற்குண்டான ஏற்பாட்டினை, ஒரு காலக் கெடுவை நிர்ணயித்து, அரசு செய்து தர முன்வருமா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்குட்டுவன் அவர்கள் சொல்வதுபோன்ற நிலைமை இல்லை. எந்தவொரு கூட்டுறவுச் சங்கத்திலும் கடந்த 6 ஆண்டுகளில் திருட்டுச் சம்பவம் நடைபெறவில்லை. இது ஒரு சரித்திர சாதனை. (மேசையைத் தட்டும் ஒலி) எந்தவொரு கூட்டுறவுக் கடன் சங்கத்திலும், இதுவரை அதுபோன்று நடக்கவில்லை. (குறுக்கீடுகள்) அதற்கான முயற்சிகள் நடைபெற்றிருக்கும். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை ஏதேனும் முயற்சி நடந்திருக்கும். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) சொல்கிறேன். கொஞ்சம் கேளுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் உட்காருங்கள். நான் சொல்வதைக் கேளுங்கள். மாண்புமிகு உறுப்பினருக்கு பதில் சொல்கிறேன். கேட்டுவிட்டுப் பிறகு கேளுங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள், கொஞ்சம் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள். (குறுக்கீடுகள்) கேளுங்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேட்டுவிட்டுப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) இருங்கள்; கேட்டுவிட்டுப் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பதில் சொல்ல விடுங்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்) நான் பதில் சொல்லிவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நீங்கள் பதில் சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 6 ஆண்டுகளில் பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களில் திருட்டு முயற்சிகள் நடந்துள்ளன. (குறுக்கீடுகள்) உறுப்பினர், நான் பேசட்டுமா அல்லது நீங்கள் பதில் சொல்கிறீர்களா? (குறுக்கீடுகள்)*

2017 ஜூன் 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர், நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள்.*

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 6 ஆண்டுகளில் கூட்டுறவுச் சங்கங்களில் எந்தவிதமான திருட்டும் போகவில்லை.* Mis-appropriation *நடந்திருக்கலாம். திருடுவதற்கு முயற்சிகள் நடந்துள்ளன. ஆனாலும்கூட, இவற்றையெல்லாம் தடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள், உயர் அதிகாரிகளை அழைத்து, ஊருக்கு வெளியே இருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்களையெல்லாம், மக்கள் வசிக்கின்ற பகுதிக்குக் கொண்டுவர வேண்டும், அது சொந்த இடமாக இருந்தாலும் சரி, வாடகைக் கட்டடமாக இருந்தாலும் சரி. ஏனெனில், மக்கள் அரசின்மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அரசை நம்பி கூட்டுறவுச் சங்கங்களில் நகைகளை வைத்திருக்கிறார்கள். எனவே, அப்படிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதற்காகத்தான் இன்றைக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்துள்ள அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் என்னென்ன என்பதை அறிந்து, துறைரீதியாக ஆய்வு செய்து, நிச்சயமாக சுற்றுச் சுவர் கட்டிக் கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

பாதுகாப்பு என்பது எல்லோருக்கும் அவசியமான ஒன்றுதான். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்களுக்குச் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, பாதுகாப்பற்ற இடங்களில் இருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கு சுற்றுச்சுவர் எழுப்பப்படும். அதேபோன்று, இன்றைக்குக் கணினிமயமாக்கும் பணிகளும் நடைபெற்றுவருகின்றன. அனைத்துப் பணிகளையும் On–line *மூலமாகத் தெரிந்துகொள்வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, பாதுகாப்பினைப் பொறுத்தவரையில் யாரும் கவலைப்பட வேண்டிய தேவையில்லை. மக்கள் எந்தவிதமான அச்சுறுத்தலும் கொள்ளத் தேவையில்லை. நான் ஒன்றே ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். கடந்த 6 ஆண்டுகளில், தனியார் வங்கிகளில்*

மற்றும் தேசியமாக்கப்பட்ட வங்கிகளில் கொள்ளைச் சம்பவங்கள் நடைபெற்று இருக்கின்றன. ஆனால், கூட்டுறவுச் சங்கங்களில் கொள்ளைச் சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை என்பதை ஆணித்தரமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் கொஞ்சம் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள். (குறுக்கீடு) திரு. சு. புகழேந்தி, உட்காருங்கள்.

2—

துணை மின் நிலையத்தை தரம் உயர்த்துதல்

***2551—திரு. அ. நல்லதம்பி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, மட்றப்பள்ளியில் உள்ள துணை மின் நிலையத்தை தரம் உயர்த்தி, அதில் கட்டுப்பாட்டு அறை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றாடம் நாங்கள் வணங்குகின்ற எங்கள் இதய தெய்வத்தை முதலில் வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியதற்கிணங்க, திருப்பத்தூர் தொகுதியில், மட்றப்பள்ளி என்னும் இடத்தில் இயங்கி வரும் 33/11 கி.வோ. துணை மின் நிலையத்தை தரம் உயர்த்திடவும், அங்கே ஏற்கெனவே இருக்கின்ற 1 x 8 எம்.வி.ஏ. மின்மாற்றியில், மின் பளு அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் கூடுதலாக ஒரு 1 x 8 எம்.வி.ஏ. மின்மாற்றியை அமைப்பதற்கும், அதைப்போல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற கட்டுப்பாட்டு